## தி.மு.க இளைஞர் அணி

# மாவட்ட வாரியாக சமூக வலைதளப் பக்கம் தொடக்கம்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜூலை 20-

தி.மு.க. இளைஞர் அணிக்கு மாவட்ட வாரியாக சமூக வலைதளப் பக்கங்களை இன்று (20.07.2024-சனிக்கிழமை) காலை சென்னை தேனாம்பேட்டையில் உள்ள, இளைஞர் அணி தலைமைச் செயலகமான அன்பகத்தில் இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

1980 ஜூலை 20 அன்று மதுரை ஜான்சி ராணி பூங்காவில் கழக இளைஞர் அணி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த அணி, 44 ஆண்டுகளைக் கடந்து 45ஆம் ஆண்டில் இன்று அடியெடுத்து வைக்கிறது.

அந்த நிகழ்வைக் கொண்டாடும் விதமாக 45 ஆம் ஆண்டு தொடக்க விழா, தி.மு.க. கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், அன்பகத்தில் உள்ள அண்ணா மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

விழாவையொட்டி, வருவாய் மாவட்ட வாரியாக இளைஞர் அணியின் சமூக வலைதளப் பக்கங்களையும், இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான சமூக வலைதளப் பயிற்சியையும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்களும், முதல் இரண்டு மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட, மாநகர துணை அமைப்பாளர்களும் பங்கேற்க உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (19.07.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு செங்கல்பட்டு மாவட்டம், ஆலந்தூர் மற்றும் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் ஒன்றியம், பொழிச்சலூர் மற்றும் கவுல் பஜார் ஆகிய கிராமங்களில் மழைநீர் கால்வாய் அமைத்தல், சாலைகள் மற்றும் பூங்காக்களை மேம்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.11.37 கோடி நிதியை செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் செல்வி.அனாமிகா ரமேஷ், அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை இணைச் செயலாளர் ஷ்ரவன் குமார் ஜடாவத் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவு

# யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 20-

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவு சார்பில் தமிழ்நாடு அரசின் யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகை திட்டம் (2024) குறித்த அறிவிப்பினை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் 2023-24-க்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காக பயின்று வரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச்செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தை செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 சிவில் சர்வீசஸ் பயின்று வரும் மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

இத்திட்டம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2024-2025-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் உரையில், பத்தி எண்.78 இல், இந்தத் திட்டத்தின் தொடர்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டின் யு.பி.எஸ்.சி. முதல்நிலை தேர்வில் (16.06.2024) தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக 25,000 ரூபாய் நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

இந்த ஊக்கத்தொகையைப் பெறுவதற்கு நடப்பு ஆண்டில் (2024) யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், https://portal.naanmudhalvan.tn.gov.in/upsc_registration என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவிக்கையைப் படித்து பார்த்து, 19.07.2024 முதல் 28.07.2024 வரை விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொளத்தூர் கபாலீஸ்வரர் கலை அறிவியல் கல்லூரியில்

# இளங்கலை சைவ சித்தாந்த பட்டப் படிப்பு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 20-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (19.7.2024) சென்னை, கொளத்தூர் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள இளங்கலை சைவ சித்தாந்தம் (B.A. Saiva Siddhanta) பட்டப் படிப்பிற்கான வகுப்புகளை தொடங்கி வைத்து, மாணவ, மாணவியருக்கு புத்தகங்களை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சிறப்புரையாற்றுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களால் தொடங்கப்பட்ட கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நான்காம் ஆண்டு அடியெடுத்து வைத்திருக்கின்றது. இந்தாண்டு புதிதாக இளங்கலை சைவ சித்தாந்தம் பட்டப்படிப்பு தொடங்கப்படும் நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள தவத்திரு பேரூர் ஆதினம், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆகியோரை துறையின் சார்பில் வரவேற்கின்றேன். இந்த இரு ஆதீனங்களும் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டு பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டுள்ளார்கள்.

திருக்கோயில்கள் சார்பில் 25 பள்ளிகளும், 10 கல்லூரிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒட்டுமொத்தமாக 22,247 மாணவச் செல்வங்கள் பயின்று வருகின்றனர். இந்த பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.80 கோடி செலவில் வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகங்கள் போன்றவற்றை ஏற்படுத்தி தந்துள்ளார். அதேபோல பழனி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், அம்மாணவர்களுக்கு மதிய உணவும் அளித்து கல்லூரிகளிலேயே காலையும், மதியமும் உணவு வழங்கும் திட்டத்தை செயல்படுத்திய பெருமை இந்து சமய அறநிலையத்துறையே சாரும்.

ஆண்டுதோறும் கல்லூரியில் பயில இடம் கிடைக்காமல் மாணவர்கள் கல்வியை தொடர இயலாத நிலையை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூரில் 02.11.2021 அன்று கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் இந்த கல்லூரியை தொடங்கினார்கள். இக்கல்லூரியில் தற்போது 747 மாணவச் செல்வங்கள் பயின்று வருகின்றனர். கடந்தாண்டு இக்கல்லூரியில் இறுதி யாண்டு பயின்று வந்த 235 மாணவ, மாணவிகளில் 141 மாணவ, மாணவிகள் கல்லூரி வளாக நேர்காணல் (Campus Interview) மூலம் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். அதனைத் தொடர்ந்து, எந்த கல்லூரியிலும் இல்லாத அளவில் சைவ சித்தாந்த பட்டப்படிப்பு தொடங்கப்பட்டு 25 மாணவ, மாணவியர் சேர்ந்துள்ளனர். அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, இந்த கல்விப் பணி திராவிட மாடல் ஆட்சியில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தவத்திரு பேரூர் ஆதினம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், எவர்வின் பள்ளியின் தாளாளர் பா. புருஷோத்தமன், கல்லூரியின் செயலாளர் / இணை ஆணையர் திருமதி க. பெ.கவெனிதா, கல்லூரி முதல்வர் திருமதி சி.லலிதா, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி அமுதா, திருமதி சாரதா, திருமதி ஸ்ரீதனி, திருமதி யோகப்பிரியா, அறங்காவலர்கள், ஐ.சி.எப். முரளி, சந்துரு, மகேஷ் குமார், திரு.பாபு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி 40 வது வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை அமைக்கும் பணியினை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாமன்ற உறுப்பினர் சத்யா கோ.ரவி சார் பதிவாளர் தேவேந்திரன், ஆவடி மாநகராட்சி பொறியாளர் குமார், ரவிச்சந்திரன், பகுதி செயலாளர்கள் பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், மற்றும் எஸ்.விஜயன், வழக்கறிஞர் பெ.வினோத், பிரவீன் குமார், மனோகரன், ஹரி, யுவராஜ், சாந்தி பாண்டியன், மார்கெட் ராஜா, வெங்கடேசன், இளங்கோ, ஆவடி பாலா, உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

## புதியதாக அமையவுள்ள சுதந்திரதின அருங்காட்சியகத்திற்கு

# நாமக்கல் கவிஞருக்கு 1945 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வெள்ளிப் பேழை - வாழ்த்துப் பட்டயம்!

### நாமக்கல் கவிஞர் பேரன் முனைவர் இரா.அ.பழனியப்பன் - அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - மு.பெ. சாமிநாதனிடம் வழங்கினார்!

சென்னை, ஜூலை.20-

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதன் அவர்களிடம் 18.07.2024 அன்று, நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு 1945-ஆம் அண்டு வழங்கப்பட்ட வெள்ளிப் பேழை மற்றும் வாழ்த்துப் பட்டயத்தை புதிதாக அமையவுள்ள தமிழ்நாடு அரசின் சுதந்திர தின அருங்காட்சியகத்திற்கு நாமக்கல் கவிஞர் அவர்களின் பேரன் முனைவர் இரா.அ. பழனியப்பன் அவர்கள் வழங்கினார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் 260 ஆண்டு கால தொடர் பங்களிப்பு குறித்து, எதிர்கால இளம் சமுதாயம் அறிந்து கொள்ளும் வகையில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சுதந்திர தின அருங்காட்சியகம் சென்னையில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களால் 15.08.2022 அன்று 75-ஆவது சுதந்திர தின விழா உரையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை மெரினா கடற்கரையின் எதிரில், பாரம்பரியக் கட்டடமான ஹுமாயூன் மஹால் கட்டடத்தில் சுமார் 80,000 சதுர அடி பரப்பளவில் பெரிய அளவில் இச்சுதந்திர தின அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

ஜான்சிராணி ஆயுதமேந்தி போரிடுவதற்கு அரை நூற்றாண்டு முன்பாகவே தமிழகத்தில் வீர மங்கை வேலுநாச்சியார் விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார்கள். தாய் திருநாட்டிற்காக தங்கள் இன்னுயிரை ஈந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் தமிழ் மண்ணில் தோன்றிக் கொண்டே இருந்தனர். அவர்களுள் செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், ஆங்கிலேயரக்கு எதிராக கடுமையாக போராடினார். அதற்கு பரிசாக அவருக்கு கடும் சிறைத் தண்டனை கிடைத்தது. பாரதியார் தனது இனிய தமிழ் பாடல்கள் மூலம் சுதந்திர உணர்வை தட்டி எழுப்பினார். மகாத்மா காந்தி அவர்களின் வருகைக்குப் பின்னால் தமிழகத்தில் சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது. மூலை முடுக்கெல்லாம் விடுதலைத் தீ பரவியது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்கள் "கத்தியின்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகிறது" என்ற பாடலை பாடி தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றினார்கள். அது தான் உப்பு சத்தியாகிரகத்திற்கு எழுச்சிப் பாடலாக இருந்தது. மகாத்மா காந்தி அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அறப் போராட்டத்தால் மட்டுமே நாடு விடுதலையைப் பெற முடியும் என்று உறுதியாக நம்பினார். இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும் அகிம்சையை பற்றியும் வலியுறுத்தியதால் இவர் காந்தியக் கவிஞர் என அழைக்கப்பட்டார்.

இவ்வாறு பாடுபட்டு பெற்ற சுதந்திரம் பற்றிய வரலாற்றை இன்றைய இளம் தலைமுறை அறிந்து கொள்ளும் வகையில் இந்த சுதந்திர தின அருங்காட்சியகத்தில், சுதந்திரப் போராட்டம் குறித்த பழங்கால ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள், செய்தித் தாள்கள், ஜெயில் வில்லைகள், இராட்டைகள், பட்டயங்கள், ஐ.என்.ஏ.சீருடைகள், ஐ.என்.ஏ. அஞ்சல் தலை மற்றும் ரூபாய் நோட்டுகள் போன்றவை காட்சியில் வைக்கப்பட உள்ளன. இதற்காக அரிய பொருட்கள் சென்னை மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்களில் இருந்து திரட்டப்பட உள்ளது. இதில் பொது மக்களின் பங்களிப்பு என்பது மகத்தானது.

அந்த வகையில் அருங்காட்சியகத்திற்கு நாமக்கல் இராமலிங்கம் அவர்களின் வாரிசான முனைவர் பழனியப்பன் அவர்கள், நாமக்கல் கவிஞர் அவர்கள் பயன்படுத்திய பல அரிய பொருட்களை குறிப்பாக அவரது ஆடைகள், அவர் பயன்படுத்திய கேமரா, மின் விசிறி மரப் பெட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை இந்த அருங்காட்சியகத்திற்கு நன்கொடையாக வழங்கி இருக்கிறார்கள். அவற்றில் அவர் வழங்கிய அரிய பொருட்களான வெள்ளியிலான பேழையில் உள்ள பட்டயம் வரலாற்று சிறப்பு வாய்ந்தது.

சென்னை நகர சபையினரால் 1945-ஆம் ஆண்டு நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களுக்கு வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்ட பட்டுத் துணியிலான வாழ்த்துப் பட்டயத்தை வழங்கினார்கள். இந்த வெள்ளிப் பேழையை இத்தனை ஆண்டுகள் பாதுகாத்து வந்த கவிஞர் இராமலிங்கம் அவர்களின் பேரன் முனைவர் பழனியப்பன் அவர்கள் நிதி அமைச்சர் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களிடம் 18.07.2024 அன்று, சென்னை சேப்பாக்கம் ஹுமாயூன் மஹாலில் புதியதாக அமையவுள்ள சுதந்திர தின அருங்காட்சியகத்திற்கு வழங்கிடும் விதமாக வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அரசு முதன்மை செயலாளர், முனைவர் பி. சந்திர மோகன், அருங்காட்சியகத்தின் ஆணையர், மா. அரவிந்த் மற்றும் அருங்காட்சியத் துறையின் உதவி இயக்குனர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர். மேலும், பாவலர் நாமக்கல் இரா.அ.பழனியப்பன், கண்மணி பழனியப்பன், நடராஜன் அனுமந்தன், பாண்டியன் அனுமந்தன் ஆகிய நாமக்கல் கவிஞர் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## ஆவடி சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து

# ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடை அமைக்கும் பணி!

### முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜூலை 20

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பகுதியில் நீண்ட நாட்களாக வாடகை கட்டிடத்தில் நியாய விலைக்கடை செயல்பட்டு வருகிறது இப்பகுதியில் 1260 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர் நிரந்தரமாக நியாயவிலைக் கடை அமைக்கும் வேண்டுமென்று ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசரியிடம் மனு வழங்கினார்கள் இதனை ஏற்று ஆவடி சட்ட மன்ற உறுப்பினர் நிதிலிருந்து சுமார் 13 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு புதிய நியாய விலைக் கடை அமைக்க பணியை துவக்க விழா நடைபெற்றது இதில் இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ புதிய நியாய விலைக் கடை அமைக்க பணியை துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினார்

மேலும் அப்பகுதியில் உள்ள பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் காலை உணவு வழங்கி அப்பகுதியில் உள்ள பிரச்சனைகளை கேட்டறிந்து அதற்கான உடனடியான தீர்வுகளை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார் இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், சார்பதிவாளர் தேவேந்திரன், ஆவடி மாநகராட்சி பொறியாளர் குமார், ரவிச் சந்திரன், பகுதி செயலாளர் பொன்.விஜயன், ஜி. நாராயண பிரசாத், வட்ட செயலாளர் எஸ்.விஜயன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத், மற்றும் பிரவீன் குமார், மனோகரன், ஹரி, யுவராஜ், சாந்தி பாண்டியன், மார்கெட் ராஜா, வெங்கடேசன், இளங்கோ, ஆவடி பாலா, உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டார்கள் மாமன்ற உறுப்பினர் சத்யா கோ.ரவி நன்றி கூறினார்



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2024-2025 ஆம் ஆண்டுக்கான அவைக் குழுவின் முதல் கூட்டம் அவைக் குழுவின் தலைவரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதியின் 10-வது தளத்தில் நேற்று (19.07.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதி ஆகியவற்றில் நடைபெற்ற பணிகள் குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அவைக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்றச் செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.